RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பாரதியின் தத்துவச் சிந்தனைகள்

**சீ. காயத்ரி தேவி** [அ, *]

[அ] தமிழ் உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை- 625004, தமிழ்நாடு, இந்தியா

# A Study of Bharati's Philosophical Ideas

**C. Gayathri Devi** [a, *]

[a] Centre for Advanced Studies in Tamil, Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai – 625004, India

* Corresponding Author: gayathrimtnc@gmail.com

**ABSTRACT**

Subramania Bharati had a profound interest in the Vedas, yet he did not allow Vedic thought to become a restrictive religious identity. Instead, he transcended narrow religious boundaries and engaged with broader dimensions of spiritual wisdom, intellectual inquiry, and universal human thought. Through his philosophical ideas, Bharati sought to awaken Tamil society, which was living under the oppressive conditions of colonial rule, and inspire a renewed sense of intellectual freedom and self-confidence. A scholar with wide-ranging intellectual interests, Bharati expressed diverse social ideas through his poetry and prose. At the same time, his works contain an extensive body of philosophical reflections concerning spirituality, humanity, freedom, equality, knowledge, society, and the nature of existence. His philosophical thought does not remain confined to abstract speculation; rather, it is closely connected with social transformation and human liberation. Bharati's philosophical vision combines spiritual awareness with rational inquiry, social consciousness, freedom, equality, and universal humanism. His writings demonstrate an effort to transcend religious and social divisions while encouraging individuals to develop independent thought and a broader understanding of humanity. This article examines the philosophical ideas of Subramania Bharati, identifying and analyzing the major philosophical themes expressed in his literary works with appropriate textual evidence. The study seeks to demonstrate how Bharati transformed philosophical thought into a dynamic force for intellectual awakening, social reform, human freedom, and the creation of a progressive society.

**Keywords:** Philosophy, Spirituality, Advaita, Supreme Reality, Bharathi

## முன்னுரை

பாரதி ஓர் தீர்க்கத்தரிசி. பாரதி ஒரு புரட்சியாளர். பாரதி ஓர் உறுதி கொண்ட நெஞ்சமுடையவர். ஒரே தளத்தில் இயங்காமல் தேசியம், விடுதலை, பெண்ணுரிமை என்ற பல கோணங்களில் தம்மை ஒரு கருத்தியல் வாதியாக நிலைநிறுத்தியவர். அவரது படைப்புகள் எல்லா தளங்களையும் தொட்டுச் சென்றுள்ளன. குறிப்பாக அவரது பாடல்களில் நுட்பமான ஆழ்ந்த தத்துவச் சிந்தனைகளைக் கொண்டதாக அமைகின்றது. பாரதி தனது குல கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர். அச்சமின்மை, பெண் கல்வி, சாதி ஒழிப்பு, நாட்டிற்குத் தொண்டு செய்தல் போன்றவையை தனது வாழ்நாள் முழுவதும் தத்துவமாகவே பயணித்தவர்.

## தத்துவச் சிந்தனைகள்

பாரதியார் தம் பாடல்களில் தத்துவச் சிந்தனைகளை உள்வாங்கியது மட்டுமின்றி அவற்றை வழிகாட்டும் மனிதனாகவும் இயங்கியுள்ளார். பாரதியின் தத்துவங்களாக யான், தெளிவு, ஒளியும் இருளும், மது, அச்சமில்லை, சங்கு, அறிவே தெய்வம், பர சிவ வெள்ளம், காலனுக்கு உரைத்தல், தீ - அக்நி ஸ்தோமம், பகைவனுக்கு அருள்வாய், ஆத்ம ஜயம், பொய்யோ? மெய்யோ? ஜய பேரிகை, கற்பனை ஊர், விடுதலைப் பாட்டு, அம்மாக் கண்ணு பாட்டு, கடமை, மணப்பெண், விடுதலை, சித்தாந்தச்சாமி கோயில், நான், எங்கள் மதம், மனதிற்கு, மனதிற்குக் கட்டளை, அகவிழியில் காண்பது, ஆனந்தம், பண்டாரப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, உலகை நோக்கி ஒரு வினா, ஸ்ரீ கபிலர் அகவல் என பல்வேறு தலைப்புகளில் பகிர்ந்துள்ளார். மேற்சுட்டிய தலைப்புகளில் தெளிவு, அறிவே தெய்வம், அகவிழியில் காண்பது, அச்சமில்லை எனும் தலைப்புகளில் பாரதியாரின் தத்துவச்சிந்தனைகளைக் காணலாம்.

'தெளிவு' என்னும் தலைப்பில் தெளிந்த நீராகவே அவரது மனம் தென்படுகின்றது. ஆன்மீகம் அத்வைதம் மன உறுதி ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைத்து நுட்பமான உலகில் தத்துவ பார்வையை தம் பாடல்களில் வெளிக் காட்டியுள்ளார். பிறரோடு கலந்துரையாடல் என்னும் நிலையை இணைக்காமல் தன் மனதுடன் உரையாடி செல்வதாக தம் பாடல்களில் கருத்துக்களைக் கட்டமைத்துள்ளார்.

கடவுள் எல்லாவற்றிலும் நிறைந்து இருப்பான் நாமும் அதனுடைய ஒரு பகுதியை எனக்கு ஒரு அனைத்தும் ஒன்றே சிந்தனையை உணர்ந்தால் நான் ஏழை என்ற குறை இடம்பெறாது என்ற தத்துவத்தை எதார்த்தமாக பதிவு செய்கின்றார். அதேபோல் ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான எல்லா உயிர்களுக்கும் ஒரே ஆன்மா உள்ளது ஆகவே உலக சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் பின்பற்றுதல் நன்று என்ற தத்துவத்தை முன் வைக்கின்றார். இதனை,

"உள்ள தெலா மோர் உயிரென்று கண்டபின்

உள்ளங் குலைவதுண்டோ? - மனமே!

வெள்ளம் எனப்பொழி தண்ணருள் ஆழ்ந்தபின்

வேதனை உண்டோடா?

சித்தின் இயல்பும் மதன்பெருஞ் சத்தியின்

செய்கையும் தேர்ந்துவிட்டால் - மனமே!

எத்தனை கோடி இடர்வந்து சூழினும்

எண்ணஞ் சிறிதுமுண்டோ? "1 - (தத்துவம்- தெளிவு: 2, 3)

எனும் அடிகளில் பாரதியின் தத்துவச் சிந்தனைகளை உயிர்த்து உணரலாம். ஆன்ம ஞானம் பெற்ற மனதிற்கு பயமும் துன்பமும் இல்லை என்பதில் தெளிந்த சிந்தை உடையவராய் பாரதி திகழ்ந்துள்ளார் என்பதை இவரது தத்துவத்தின் மூலம் அறிய முடிகிறது.

'அச்சமில்லை' எனும் தலைப்பில் ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு உட்பட்டிருந்த காலகட்டத்தில் இவரது பாடல்கள் தீ மூட்டுவதாகத் திகழ்ந்தன. பயமற்ற நிலையை மக்களிடம் உருவாக்க வேண்டும் என்ற சிந்தையில் பாரதியார் தெளிவாக இருந்துள்ளார். அதன் வெளிப்பாடாக மனித விடுதலை தத்துவமும், வீரமுடைய தன்மையும் பயமற்ற வாழ்வியலை நிலைநாட்ட 'அச்சமில்லை' என்னும் தலைப்பில் தனது தத்துவச் சிந்தனையைப் பரப்பியுள்ளார். பயம் என்பது மனதின் மாயை, சமூக எதிர்ப்பு, தடை பழி போடல், குற்றம் சாட்டல் விமர்சனம் இவைகள் எது தம்மை தாக்கினாலும் அவற்றை எதிர்த்து நின்று போராட வேண்டும். உயர்வு தாழ்வு இவைகள் அனைத்தும் நிலையானவை அல்ல, மன அமைதியை உண்மையான செல்வம். எந்த நிலையிலும் மன உறுதியாக இருத்தல் வேண்டும் என்பதை தத்துவக் கருத்தாக பாரதியார் நம் பாடல்களில் முன் வைத்துள்ளார். சான்றாக,

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

துச்சமாக எண்ணிநம்மைத் தூறுசெய்த போதினும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!"2 - (தத்துவம்- அச்சமில்லை: 1)

என்னும் பாடலில் அறியலாம். வாழ்வில் எந்தச் சூழலிலும் மனம் தளராது உறுதியுடன் பயப்படாமல் நிற்க வேண்டும் என்ற தத்துவத்தை மேற்சுட்டிய பாடலில் முன் வைக்கின்றார்.

'அறிவே தெய்வம்' என்னும் தலைப்பில் ஆன அமைந்த பகுதியில், வெளிப்புற தெய்வ தேடலை விட உள்ளார்ந்த அறிவே தெய்வம் என்ற உண்மையை தத்துவமாக இயங்கியுள்ளார் பாரதியார்.

ஆயிரம் தெய்வங்களைத் தேடி அலைவது அறியாமையின் உச்சம். வேதங்கள் கூறும் ஒரே பரமார்த்தம் அறிவும் ஞானம் தான் என்ற தத்துவத்தை முன்வைக்கின்றார். விக்கிரக வழிபாடான மாடன் கார்டன், வேடன் போன்ற பல உருவங்களைப் போற்றுவது வெளிப்புற நம்பிக்கை ஆகும். சுத்த அறிவே சிவம் எனவும் மதம் என்பது ஒரு பாதை மட்டுமே அது உண்மை அதற்கு அப்பாற்பட்டது என்ற தத்துவ கருத்தினை,

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள் - பல்

லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்

டாமெனல் கேளீரோ?

மாடனைக் காடனை வேடனைப் போற்றி

மயங்கு மதியிலிகாள் - எதன்

ஊடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்

றோதி அறியீரோ?"3 -(தத்துவம் - அறிவே தெய்வம்: 1-2)

என முன் வைக்கின்றார். எனவே தீபம் உள்ளுணர்வில் இருப்பது அறிவு சுத்த சிந்தனை ஆன்ம ஞானம் இவைகளே பரம்பொருள் என தத்துவ சிந்தனைகளை அடுக்கிக்கொண்டேச் செல்கின்றார். உருவ வழிபாடு என்னும் பெயரில் நடக்கும் போலித்தனங்களையும் மூட பழக்க வழக்கங்களையும் முற்றிலும் துறந்த பாரதி தமிழ் சமூகத்தின் மடமைத்தனத்தை நீக்க வந்த மாபெரும் தத்துவவாதியாக தனது ஒவ்வொரு கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்.

'அக விழியில் காண்பது' என்னும் தலைப்பில், புலன்கள் காட்டுவது பொய் ஆக ஞானத்தால் மட்டுமே தெய்வ உண்மை வெளிப்படும் எனும் இரு பெரும் தத்துவ சிந்தனையைக் கருத்தாகப் பொழிகின்றார் பாரதியார். உலக வாழ்க்கையே மாயை. மனிதன் என்பவன் சாதாரணமானவன் இல்லை அவன் தெய்வீக ஆற்றல் காணப்படுகின்றது என்பதை புலப்படுத்துகிறார். இதனை,

"கனவென்றும் நனவென்றும் உண்டோ?

காண்பது காட்சியல் லாற்பிறிதாமோ? இங்கு

மனையி லிருப்பது வானம் - அந்த

வானத்தின் வந்தவர் தேவர்முனிவர்,

நினைவது செய்கை அறிவீர் -

எந்த நேரத்துந் தேவர்கள் காப்பது வையம்,

வினவிற் பொருள்விளங் காது -அக

விழியைத் திறந்திடில் விண்ணிங்கு தோன்றும்"4 -(தத்துவம் -அக வெளியில் காண்பது: 1)

எனும் பாடலில், உள்ளுணர்வு திறந்தால் பரம்பொருள் அறியப்படும் இவற்றை வெளியில் தேட வேண்டாம் உள்ளே அகவழியில் விழித்தால் மட்டுமே உண்மை வெளிப்படும் என்ற பெரும் தத்துவத்தை போகின்ற போக்கில் விதையாத் தூவிச் செல்கின்றார்.

## முடிவுரை

எது மடமை எது மெய்மை என்பதைக் கையாளுவதில் பாரதியார் வல்லமைப் படைத்தவராகத் திகழ்ந்துள்ளார். எதற்கும் துணிந்த குணம் படைத்தோனாய் மட்டுமின்றி தமிழன மக்களுக்கு எவற்றிக்கெல்லாம் அஞ்சுதல் வேண்டும்/ வேண்டாம் என்பதைத் தெளிவுப் பட உரைத்துள்ளார். மூடப் பழக்கவழக்கங்களையும் கெட்ட சாத்திரங்களையும் வேரொடு அழிப்பதற்கு முக்கிய காரணியாகத் திகழும் அறிவைத் தெய்வம் எனப் பாராட்டியுள்ளார். புலன்களால் தென்படுவதைத் தவிர்க்கச் சொல்லி அக விழியில் நோக்குவதே சாலச் சிறந்தது என்பதைத் தெளிவுப் படுத்தியுள்ளார். இறுதியாக தனது பாடல்களில் செய்யுள் அழகிற்குப் பாடாமல் தத்துவச் சிந்தனைகளுடன் பாடிய நிலையானது, இன்று

மட்டுமல்ல இனியும் வரக்கூடியத் தலைமுறையினருக்கும் பொருந்தும்படி ஆணித்தரமாய்க் கூறியுள்ளார்.

## References

சந்திரகாந்தன் (1998) பாரதியார் கவிதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

இளமதி சானகிராமன், க. (2004) பாரதியின் சமுதாயச் சிந்தனைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மணி, பெ.சு. சமூக சீர்த்திருத்த வரலாற்றில் பாரதியார், பூங்கொடி பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License